ஒத்துக்கொள்கிறோம். ஆனால் அரசாங்கத்தினுடைய மற்ற சில நடவடிக்கைகளில் எல்லா மக்களுக்கும் பங்கு உண்டு என்பதுதான் ஜனநாயக அமைப்பு முறை. ஆகவே அந்த முறையில் அனைத்துக்கட்சியினரையும் சேர்ந்தவர்களைக்கொண்டு இப்படிப்பட்ட அமைப்புகளை ஏற்படுத்த வேண்டாமா? ஆளுகின்ற கட்சியினரைக்கொண்டுதான் ஏற்படுத்தப்படவேண்டும் என்று சொல்வது சரியா? .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதே கேள்வியைத்தான் எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொருவராகக் கேட்டுக்கொண்டிருந்தால் நேரம் தான் வீணாகுமே தவிர கேள்வி ஒன்றுதான். ஆகவே கேட்ட கேள்வியையே திரும்பத் திரும்பக் கேட்டு நேரத்தை வீணாக்கக் கூடாது.

திரு. கு. ரமணி: பிரிட்டிஷ் காலத்தில் கூட அவர்கள் இஷ்டம் போல் செய்தார்கள், ஆகவே அதையே நாங்களும் பின்பற்றுவோம் என்று சொல்வார்களா? ஆகவே கட்சிசார்பிலே அனைத்துக் கட்சியினுடைய பிரதிநிதிகளையும் கொண்டு போட வேண்டும். அதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த விஷயம் சென்னை நகருக்கு உட்பட்டதுதான். எனவே முன்பிருந்தவர்கள் சென்னை நகரிலே செல்வாக்குள்ள கட்சி என்பதாலும், சென்னை நகரைச் சேர்ந்த பலர் இருக்கிறார்கள் என்பதாலும் இப்படி செய்திருக்கிறார்கள் என்றுதான் இந்த அரசும் கருதுகிறது. ஆகவே இது ஒரு நல்ல கன்வென்ஷன் என்றுதான் நாங்களும் கருதுகிறோம். இந்த ஹெல்தி கன்வென்ஷனை, முன்பு எங்களோடு இருந்தவர்கள், மதிக்கத்தக்கவர்கள் பின்பற்றினார்கள். ஆகவே அதனை விட்டுவிடவேண்டாம் என்பதால் தொடர்ந்து அதே முறையைக் கடைப்பிடித்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மங்கலம் பஞ்சாயத்தில் பவர்லூம் தொழிலாளர்கள்.

*வினா எண் 587—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் பல்லடம் தாலுக்கா மங்கலம் பஞ்சாயத்தில் பவர்லூம் தொழிலாளர்கள் நீண்ட நாட்களாகவே வேலை நிறுத்தம் செய்து வருவது அரசுக்கு தெரியுமா?—

(ஆ) தொழிலாளர்களின் கோரிக்கைகளை தீர்த்து வைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

1979 மார்ச் 31]

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ) ஆம். கோவை மாவட்டம் பல்லடம் தாலூகா மங்கலம் பஞ்சாயத்தில் பவர் லூம் தொழிலாளர்கள் சம்பள உயர்வு, வார விடுமுறை, தேசீய பண்டிகை விடுமுறை, இரவு நேர டீ இவைகளைக் கோரி 1978 ஆம் ஆண்டு மே திங்கள் 9 ஆம் நாள் இரவு 9–30 மணி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். ஆனால் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1 ஆம் நாள் அன்று முதல் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு அமைதி நிலவி வருகிறது.

(ஆ) கோவை தொழிலாளர் துறை உதவி ஆணையர்-2 (சமரசம்) இருதரப்பினரிடையும் பேச்சு வார்த்தைகள் நடத்தி யதன் பயனாக 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ஆம் நாள் அன்று சம்பள உயர்வு, போனஸ், மற்றும் தேசீய பண்டிகை விடுமுறை தொடர்பாக இருதரப்பினராலும் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த பவர்லூம்களை ஏராளமாக கிராமங்களிலே குடிசைகளிலே வைத்துக்கொண்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. அவர்களுக்கு எந்தவித மான பாதுகாப்பும் இல்லை. ஆகவே மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் இந்தப் பவர் லூம் எந்தெந்த இடங்களில் இருக்கிறதோ அங்கெல்லாம் சென்று ஒரு சர்வே செய்து அவற்றை சட்டத்திற்குள் கொண்டுவருகிற மாதிரியான ஏற்பாட்டைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மூலக்கேள்வி மங்கலம் பஞ்சாயத்தில் பவர்லூம் தொழிலாளர்கள் நீண்ட நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருவது அரசுக்கு தெரியுமா என்பதைப் பற்றி. So, this Question is concerning strike. Let us not again strike at it. Leave it there.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஸ்ட்ரைக் என்று சொன்னார்கள். இந்த ஸ்ட்ரைக் குறித்த கேள்வி 6 மாதம், 8 மாதம் ஆகிவிட்டபிறகு இங்கே வந்திருக் கிறது. இது குறித்து நாமேதான் கலெக்டர் அவர்களுடன் உட் கார்ந்து முடிவெடுத்திருக்கிறோம். ஆனால் அந்த ஸ்ட்ரைக்கு களின் தோற்றுவாய் எப்படி உண்டாகிறது என்பது பற்றிக் கேட் கும்போது அதுவும் இந்தக் கேள்வியோடு சேர்ந்துதான் வருகிறது. ஆகவே அதைத் தனியாக கம்பார்மென்ட் வைஸாகப் பார்க்கக் கூடாது. ஆகவே இனிமேல் ஸ்ட்ரைக்குகள் போன்றவை ஏற் படாத வகையில் முன்கூட்டியே நியாயம் வழங்குவதற்கு இந்த அரசு சார்பாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஸ்ட்ரைக்குகளைக் குறைப்பதற்குரிய ஒரு புது முறையை மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதைப் பின்பற்றுவதற்காக ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். மேலும் என்னுடைய தொழிலாளர் நலத்துறை மானியம் வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது குறித்து பேசுவார்களேயானால் அரசினுடைய கருத்தைச் சொல்லி அதன் பிறகு நாம் எல்லோரும் ஒரு நல்ல முடிவுக்கு வந்து, ஸ்ட்ரைக்குகளைக் குறைத்து உற்பத்தியைப் பெருக்கி எக்ஸ்பான்ஷன் அன்ட் மாடர்னைசேஷன் என்பதில் கான்சன்ட்ரேட் செய்வது பற்றி நாம் எல்லோரும் யோசனை செய்து ஒரு முடிவுக்கு வரலாம்.

பழநி நகரில் உள்ள அரிசன மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி.

*வினா எண் 588—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழநி நகரில் உள்ள அரிசன மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கியிருக்கும் இல்லக் கட்டிடம் மிக ஆபத்தான நிலையில் உள்ளது இந்த அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) & (ஆ) பழநி நகரில் ஒரு அரிசன பள்ளி மாணவர் விடுதியும் ஒரு கல்லூரி மாணவர் விடுதியும் ஒரு பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதியும் உள்ளன. இவற்றில் அரிசன கல்லூரி மாணவர் விடுதி தனியார் கட்டிடத்தில் இடம் பெற்றுள்ளது. அது பழுது பார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. அதை விரைந்து 'பழுது பார்க்க கட்டடத்தின் சொந்தக்காரர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். மற்ற விடுதிகள் நல்ல நிலையில்தான் உள்ளன.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே பழனி, நகரில் இருக்கக் கூடிய கல்லூரி மாணவர்கள் இல்லங்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அந்தக் கட்டடத்தை மராமத்து செய்ய வேண்டும். கட்டடத் சொந்தக்காரரிடம் வலியுறுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.